


# கலைவழி

# விவிலிய நாடகங்கள்


தொகுப்பு ஆசிரியர்

**அருள்பணி. A. ஜான் பாப்டிஸ்ட்**



வெளியீடு

**அருள்பணி. ம. பிலோமின்தாஸ்**

*இயக்குநர்*

*தமிழக முப்பணி நடுநிலையம்*

*திண்டிவனம் - 604 001*

***அன்புக்குரிய விடுமுறை விவிலியக் கல்வி ஆசிரியர்களே !***

உங்களின் பணிப் பலுவைக் குறைப்பதற்காகவே இச்சிறிய முயற்சி.

இது **‘கலைவழி விவிலிய நாடகங்கள்’** எனும் மூன்றாம் படைப்பு.

இந்நூல் விவிலிய வகுப்புகளில் கற்றதைக் கலைவழி வெளிக் கொணர்வதற்கு உதவும் துணைநூல்.

ஆசிரியர்களின் முயற்சிகள் வெற்றிபெற உதவும் ‘நாடக நூல்’.

மாணவச் செல்வங்கள் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடும் ஒரு நிகழ்ச்சிதான் நாடகம்.

நாடகங்கள் எழுதித் தந்த **திருமதி. ஜோ. ரெஜினா கிரகோரி, ஜா. மரிய ரோஸ்லின், அ. ஜான்ஸிஅமல்,** ஆகியோருக்கு நன்றி.



இந்நாடகங்களை தொகுக்க உதவிய **தூத்துக்குடி மறைமாவட்ட விவிலியப் பணிக்குழுவுக்கு** நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டவரின் வார்த்தையின் பொருளை அறிந்து கொள்ள இந்த நாடகங்கள் உதவும் என்று நம்புகிறேன். எனவே, இந்த ஆண்டு **‘இயற்கை நேய விபிஎஸ் - 2017’**யைச் சிறப்பிக்க வாழ்த்துகிறோம். இந்த நூலை அச்சிட்டு வெளியிடும் முப்பணி மைய இயக்குநர் **அருள்பணி. ம. பிலோமின்தாஸ்** அவர்களுக்கும், தட்டச்சு செய்து உருவம் கொடுத்த **திருமதி. மேரி ஸ்டெல்லா** அவர்களுக்கும், விவிலியப் பணிகளைத் தமிழக அளவில் ஊக்குவிக்கும் விவிலியப் பணிக்குழுவின் தலைவர் **மேதகு செ. சூசைமாணிக்கம்** அவர்களுக்கும் நன்றி.

இறைவார்த்தை பணியில் உங்களோடு உழைக்க எனக்கு வாய்ப்பளித்த இறைவனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

*இறைவார்த்தைப் பணியில்*
**அருள்பணி. A. ஜான் பாப்டிஸ்ட்**

# கிறிஸ்துமஸ் குடில்
## (நாடகம்)

### காட்சி - 1

**இடம்:** பள்ளிக்கூடம்; **பாத்திரங்கள்:** Sister, மாணவியர்

(Sister வருகிறார்கள்)

**மாணவியர்** : good evening sister

**Sister** : good evening children, பரவாயில்லையே ரொம்ப சீரியர படிக்கிறீங்களே

**மாணவி 1** : Half Yearly Exam, நெருங்குதுல sister, examக்கு தான் Prepare பண்ணிக்கொண்டிருக்கிறோம்

**Sister** : Very good, Very good. இப்பவே examக்கு Prepare பண்ணினாத்தான் நிறைய மார்க்ஸ் வாங்கலாம் அதோட கிறிஸ்துமஸூக்குத் தயாரிக்கிறீர்களா?

**மாணவி 2** : என்ன sister, இன்னைக்கு டிசம்பர் 1-ஆம் தேதி தானே ஏதுக்கு இப்பவே Prepare பண்ணனும்

**மாணவி 3** : அதான் இப்ப ரெடிமேட்ல சோளி, சுடிதார், லெகாங்காசோனி எல்லாம் வகைவகையா கிடைக்குதே. லீவு விட்டதும் ஒரே நாள்ல வாங்கி விடலாம்.

**மாணவி 4** : பலகாரமெல்லாம் கூட இப்ப வீட்ல செய்யனும்னு அவசியம் இல்ல. எல்லாம் கடையிலேயே order பண்ணி வாங்கலாம்.

**மாணவி 5** : எங்க மாமா, அத்தை எல்லோரும் சென்னையிலிருந்து 24-ஆம் தேதிதான் வர்ராங்க அன்னைக்குதான் நாங்க Star மாட்டுவோம்.

**மாணவி 1** : கிறிஸ்துமஸ் தாத்தாவும் அன்னைக்குத்தான் வருவார்.

**Sister** : ஆமாமா, பிள்ளைகளே கிறிஸ்து பாலகன் பிறக்க குடில் வைக்க வேண்டுமல்லவா!

**மாணவி 2** : கண்டிப்பா. அத லீவு விட்ட அன்னைக்கு வைச்சிடுவோம். கிறிஸ்துமஸ் tree எல்லாம் வைப்போம்.

**Sister** : இல்லம்மா, கிறிஸ்துமஸ் குடில் டிசம்பர் 1-ஆம் தேதியிலிருந்தே வைக்க ஆரம்பிச்சிரனும்.

**மாணவி 3** : போங்க Sister, ஜோக்கடிக்கறீங்க, இப்பவே குடில் செய்தா பழசாயிடும். அப்புறம் எங்கள பாத்து மத்தவங்க காப்பியடிச்சிடுவாங்க. பங்கு சுவாமியார், அழகான குடிலுக்கு பரிசு தருவாருல? வித்தியாசம்மா Suspense -ஆ குடில் செய்யனும்ல.

**Sister** : ஆமாமா, வித்தியாசமாத்தான் செய்யனும் அதற்கான டெக்கரேசன் பொருள்களெல்லாம் நீங்கதான் செய்யனும்.

**மாணவி 4** : நாங்க செய்ய முடியாது Sister. அதைக் கடையில தான் வாங்குவோம்.

**Sister** : இல்லம்மா, எளிய குடிலில் பாலகன் பிறந்த இந்தக் கிறிஸ்துமஸ் விழா அர்த்தமுள்ளதாக இருக்கனும். நமக்காக இயேசு மனிதனாக அவதரித்த இந்த நாளில் நம்மோடு இருப்பவர்களை நேசித்து, தவறு செய்தவர்களை மன்னிக்கணும். எல்லாவற்றிற்கும் மேல் இது பகிர்வின் திருநாள். நம்மிடம் இருப்பதை ஒன்றும் இல்லாதவர்களுக்கு பகிர்ந்து அதில் மகிழ்ச்சி கொள்ளனும். வெறும் பணமோ, பொருளோ இல்லாமல் நம் நல்ல செயல்களால் கிறிஸ்துமஸ் குடில் அமைக்கனும்.

**மாணவியர்** : அத வைச்சு எப்படி Sister குடில் வைக்க முடியும்.

**Sister** : ஏழைகளுக்கு உதவும் போதும், உன்னோடு உள்ள பிள்ளைகளுக்கு பாடம் சொல்லித்தருவது, பெற்றோருக்கு கீழ்ப்படிவது போன்ற நற்செயல்களை இன்றைல இருந்து ஆரம்பிங்க. நீங்க ஒவ்வொரு நல்ல செயல் செய்யும் போதும் ஒவ்வொரு பூச்செண்டை ஒரு மேஜையில் வைச்சிருங்க. டிசம்பர் 25-ஆம் நாள் பூச்செண்டுகளால் குடில் நிறைந்திருக்கும் இயேசு பாலகனும் மனம் மகிழ்ந்து பிறப்பார்.

**மாணவியர்** : நல்ல ஐடியா Sister, நாங்க எல்லோரும் சேர்ந்து எங்க நல்ல செயல்களால இன்றையிலிருந்து குடிலை உருவாக்க ஆரம்பிக்கிறோம்.

**ராஜி (மாணவி):** Sister, நான் எங்க அப்பாகிட்ட பத்தாயிரம் ரூபாய் வாங்கிட்டு வந்து, நிறைய ஏழை பிள்ளைகளுக்கு dress எடுத்துக் கொடுப்பேன் Sister.

**மாணவி 1** : பத்தாயிரம் ரூபாயா? (வாயைப் பிளக்கிறாள்)

**மாணவி 2** : ராஜியோட அப்பா பெரிய பிசினஸ்மேன். நிறைய உதவி ஏழைகளுக்கு செய்வாரு. கண்டிப்பா ராஜி கேட்டா எவ்வளவு பணம் வேணுமானாலும் கொடுப்பாரு.

**மாணவியர்** : நாங்க வர்ரோம் Sister.

## காட்சி - 2

மாணவியர் ஒவ்வொருவரும் அவர்கள் செய்த நற்செயல்களைச் சொல்லி குடில் மேஜையில் பூச்செண்டு வைக்கிறார்கள்.

**மாணவி 1** : நான், ஒரு பிள்ளைக்கு கணக்கு சொல்லிக் கொடுத்தேன்.

**மாணவி 2** : எங்க வீட்டுக்கு வந்த ஏழைக்கு dress கொடுத்தேன்.

**மாணவி 3** : என்ன teacher கிட்ட மாட்டிவிட்ட வனிதாவை மன்னிச்சு Grammar சொல்லிக் கொடுத்தேன்.

**மாணவி 4** : கண்ணு தெரியாத ஒருத்தருக்கு சாலையைக் கடக்க உதவி செய்தேன்.

**மாணவி 5** : அம்மா கொடுத்த வேலைகளை சந்தோஷமா செய்தேன். Home Work-ஐ ஒழுங்கா செய்தேன்.

**மாணவி 3** : Sister, Sister, நாங்க எல்லோரும் பூச்செண்டு வைச்சுக் கிட்டிருக்கோம். ஆனா ராஜி மட்டும் ஒரு பூச்செண்டு கூட வைக்கல.

**Sister** : ராஜி நல்ல பொண்ணாச்சே. நிறைய பணம் கொண்டு வருவேன்னு சொன்னாளே, ஒரு வேள அப்பாகிட்ட பணத்தை வாங்கிட்டு தொலைச்சிட்டாளா!

**மாணவி 1** : Sister, ராஜி வர்ரா பாருங்க

**Sister** : வாம்மா ராஜி, நீ பாலனுக்கு பூச்செண்டு வைக்கலயா

**ராஜி** : அது வந்து. . .

**கலா** : ராஜி, ராஜி எங்கப்பா பிழச்சிட்டாரு ராஜி. எங்கப்பா பிழைச்சிட்டாரு.

**Sister** : உங்க அப்பாவுக்கு என்ன ஆச்சு கலா.

**கலா** : Sister எங்க அப்பாவுக்கு இதயத்துல ஏதோ Mistakeனும் ஆப்ரேஷன் செய்தாத்தான் பிழைப்பாருன்னு டாக்டர் சொல்லிட்டாரு. எங்க கஷ்டம் தான் உங்களுக்குத் தெரியுமே Sister. கவர்ன்மென்ட் ஆஸ்பத்திரியில் இலவசமா operation பண்ணினாலும் மாத்திரை மருந்து எல்லாத்துக்கும் பத்தாயிரம் தேவப்பட்டது. ராஜிதான் தந்தா. எங்க அப்பாவுக்கு அவதான் உயிர் கொடுத்திருக்கா Sister.

**Sister** : எவ்வளவு பெரிய காரியம் செய்திருக்க ஏன் ராஜி சொல்லலை.

**ராஜி** : எங்க அப்பாகிட்ட ஏழை பிள்ளைகளுக்கு dress வாங்கத் தான் பணம் வாங்கிட்டு வந்தேன். ஆனா இவ நிலமையப் பார்த்தா பாவமா இருந்துச்சு. கொடுத்துட்டேன் சொல்ல பயமா இருந்துச்சு Sister.

**Sister** : ஒரு உயிரையே காப்பாத்தியிருக்க இத விட மேலான நற்செயல் வேறு என்னம்மா இருக்க முடியும். இந்தா, இந்த பெரிய பூச்செண்டை குடில்ல வைப்பா.
வாங்க எல்லோரும் குடிலுக்கு போய் செபிப்போம்.



**நன்றி**
**திருமதி. ரெஜினா கிரகோரி**
*தூத்துக்குடி மறைமாவட்டம்*

# தன் வினை தன்னை சுடும்

## காட்சி - 1

(இன்ஸ்பெக்டர், ஏட்டு, வீட்டுக்காரர், திருடன்)

**வீட்டுக்காரர் :** ஹலோ. . . போலீஸ் ஸ்டேஷனா?

**இன்ஸ்பெக்டர்:** ஆமாங்க! நீங்க. . .

**வீட்டுக்காரர் :** என் பெயர் சோமு. . .

**இ.பெக்டர் :** சோமுனா . . . எந்த ஏரியா? என்ன Problem?

**வீ. காரர் :** பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான். . . அது உண்மை-யாயிடுச்சு சார். . . !

**இ.பெக்டர் :** ஏய்யா! பழமொழி சொல்லுற நேரமாய்யா. . . ! வைய்யா போனை!

**வீ. காரர் :** ஐயா. . . ! வெச்சிடாதீங்க. . . நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேளுங்கய்யா.

**இ.பெக்டர் :** சொல்லித் தொலைய்யா. . . !

**வீ. காரர் :** சார்! ரொம்ப நாளா ஒரு திருடன் கரெக்டா நாங்க டிவி சீரியில் பார்க்கும்போது வந்து வந்து திருடிக்கிட்டு போயிடுவான் சார். இன்றைக்கு கரண்ட் வேற இல்லையா! அவன் சரியா மாட்டிக்கிட்டான் சார். . ! ஏதோ கபாலியாம் சார். . !

**இ.பெக்டர் :** கபாலியா. . !

**வீ. காரர் :** ஏன் சார் அவனை உங்களுக்கு முன்பே தெரியுமா?

**இ.பெக்டர் :** தெரியுமாவா! அவனை தப்பிச்சிடாம பாத்துங்குங்க. . . நிறைய மாமூல் பாக்கி இருக்கு. . .

**வீ. காரர் :** விளையாடதீங்க சார். . !

**இ.பெக்டர் :** வைய்யா - phon-ஐ. . . !

**வீ. காரர் :** (மனதுக்குள்) விளங்கிடுச்சி.

## காட்சி - 2

(திருடன், வீட்டுக்காரர்)

**திருடன் :** (கை, கால் கட்டப்பட்ட நிலையில்)
ஏங்க இந்த ஏரியாவுல திருட்டுத் தொல்லை அதிகமோ?

**வீட்டுக்காரர் :** ஏன்? எதுவுமே தெரியாதது மாதிரி கேட்கிற. . .

**திருடன்** : இல்லங்க. . . நான் இந்த ஏரியாவுல திருடிப் பிழைக்கலாமுனு வந்திருக்கேன். தொழில் போட்டி பொறாமை இருக்கக்கூடாது பாருங்க. . . !

**வீ. காரர்** : எவ்வளவு திமிர் உனக்கு. . . (காலால் மாறி மாறி உதைத்தல்)

## காட்சி - 3

(போலீஸ் வீட்டிற்குள் நுழைதல்)

**இன்ஸ்பெக்டர்:** (வீட்டுக்காரரிடம்) எங்கய்யா. . . அந்த கபாலி. . .?

**வீட்டுக்காரர்:** இதோ. . . ! இங்க கட்டிப் போட்டிருக்கேன்.

**இ.பெக்டர்** : (திருடனைப்பார்த்து) ஏய்யா! உனக்கு அறிவு கிறிவு ஏதாவது இருக்கா. . . ? இப்படி ஒரே வீட்டில திருடினா மாட்டாம?

**வீ. காரர்** : (வாயில் அடித்தபடி) ஐய் யோ. . . இது என்ன அநியாயம். . . ! ஏன் சார். . . ? விசாரிப்பீங்க. . . தண்டனைக் கொடுப்பீங்கன்னு பார்த்தா. . . !

**இ.பெக்டர்** : சரி, சரி! வந்து ஒரு புகார் கொடுத்துட்டுப் போங்க. . ! (திருடனைப் பார்த்தபடி) ஏய்யா. .? இப்படியா அகப்படுவா?

**திருடன்** : தொழிலுக்குப் புதுசுதானேய்யா. . . ! ஏரிய வேற புதுசு. . . !

**இ.பெக்டர்** : சரி, சரி இனிமேலாவது கவனமாய் இரு. . ! (தட்டிக் கொடுத்தபடி)

**திருடன்** : (வீட்டுக்காரரிடம்) O.K. சார் bye.

## காட்சி - 4

(காவல் நிலையம்)

**இன்ஸ்பெக்டர்:** நம்ம கபாலி ரொம்ப சின்சியரப்பா. . .

**ஏட்டு** : எத வைச்சு சொல்றீங்க சார்?

**இ.பெக்டர்** : நேத்து நைட் 12 மணிக்கு திருடிட்டு 1 மணிக்கு வீட்டுக்கு வந்து கதவைத் தட்டி மாமூல் கொடுத்துட்டுப் போறானா பார்த்து கோயேன். . . !

**ஏட்டு** : மாமூல் இப்பவெல்லாம் ரொம்ப பப்ளிக்கா மாறிடுச்சிய்யா. . . (சலிப்புடன்)

**இ.பெக்டர்** : ஏன் ரொம்பதான் சலிச்சுகிறீங்க. . . !

**ஏட்டு** : பின்ன என்னத்த சொல்றது (தலையை சொரிந்தபடி)

**இ.பெக்டர்** : போய்யா. . . ! போய் வேலையைப் பாரு.

**ஏட்டு** : ஆமா. . . ! இதுக்கொன்னும் குறைச்சலில்ல - (மனதிற்குள்)

## காட்சி - 5

(அடுத்த நாள். . .)

**இன்ஸ்பெக்டர்:** ஏய்யா. . . ! ஏட்டு. இன்றைக்கு ஏதாவது. . . (இழுக்க)

**ஏட்டு** : சார்! உங்களுக்கு ஒரு பார்சல் வந்திருக்கு. சொல்ல மறந்திட்டேன்.

**இ.பெக்டர்** : பார்சலா. . . எங்க எடுத்திட்டு வா?

(ஏட்டு பார்சலைக் கொண்டு வருதல்)

**இ.பெக்டர்** : அத பிரியுமய்யா. . . ! (பிரித்த படி)

**ஏட்டு** : சார்! கேக்கு. . . ஆ . . . ஒரு லெட்டர் இருக்கு. . . !

**இ.பெக்டர்** : (எழுந்த படி) என்னது லெட்டரா. . . ? (பிரித்து படித்தவர் வாயை பிளந்தபடி நிற்கிறார்)

**ஏட்டு** : என்னாச்சு சார்? ஏன் இப்படி அதிர்ந்து போய்நிக்குறீங்க. . . !

**இ.பெக்டர்** : இங்க பாருய்யா. . . ! அவன் அடிச்ச நூறாவது பர்ஸ் என்னோட தாம். அதுக்காக எனக்கு ஸ்வீட் அனுப்பியிருக்கானாம். . . !

**ஏட்டு** : (மனதிற்குள்) தன் வினை தன்னைச் சுடும் என்பது உண்மை தானே
சார், சார்! எனக்கு ஒரு நீதிமொழி ஞாபகத்துக்கு வருது சொல்லவா சார். . . !

**இ.பெக்டர்** : ம். . . நக்கலு. . . எனக்கேவா. . . !

**ஏட்டு** : அது இல்ல சார். . . (இழுத்தபடி)
"விவேகமாக விடையளிக்கும் ஏழு அறிவாளிகளை விட, தாம் மிகுந்த ஞானமுள்ளவன் என்று நினைப்பானாம் சோம்பேறி.

**இ.பெக்டர்** : அடி. . . ! யாருய்யா. . . ! சோம்பேறின்னா.

**ஏட்டு** : சார், சார். . . ! உங்களைப் போய் சொல்வேனா. . . !

**இ.பெக்டர்** : (கோபத்துடன்) (லத்தியை எறிந்தபடி) ம். . . மறுபடியும் கிண்டலு இங்கிருந்து போய்யா (நாற்காலியில் சாய்தல்)

**குரல்** : நீங்கள் எந்த அளவையால் அளப்பீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும். பிறர் நமக்கு நல்லவற்றையே செய்ய வேண்டும் என்று விரும்பும் நாம் ஏன் பிறருக்கு அவற்றைச் செய்ய தவறி விடுகிறோம்? தவற விட்டதையே மீண்டும் தேடாது. நமது நற்செயல்களால் பிறரை மகிழ்வித்து விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழும் மக்களாக வாழ புறப்படுவோம். நன்றி. வணக்கம்.



**நன்றி**
**ஜி. மரிய ரோஸ்லின்**
*தூத்துக்குடி மறைமாவட்டம்*

# துயரினில் ஆறுதல்

**"துயருறுவோர் பேறு பெற்றோர்; ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்"**

## காட்சி - 1

மகன் (சுசிலன்), அப்பா, அம்மா, அண்ணன், அக்கா

**அப்பா** : (மகன் தூங்கிக் கொண்டிருக்கிறான்) டேய் எந்திரிடா! வெட்டிப்பயன! எப்பப் பார்த்தாலும் தூக்கம் தானா! உருப்பட்ட மாதிரிதான்.

**அம்மா** : (அடுப்படியில் இருந்தவாறு) "தெண்டச்சோறு" இவனுக்கு வடிச்சுக் கொட்டுறதே பாவம்!

**அண்ணன்** : (காலால் எட்டி உதைத்தவாறு) ஊதாரிப்பயலே! இன்னுமா உனக்குத் தூக்கம் வருது. . .

**அக்கா** : அவனுக்குத் தூக்கம் மட்டுமா வரும்!. . .

**மகன்** : (எழுந்து அமர்ந்தபடி) ஏன் எனக்கு இந்த நிலை? (மனதிற்குள் எண்ணியபடி)

**அப்பா** : என்னடா யோசிப்பு! மலையைப் பெயர்த்து எடுத்த மாதிரி!

**மகன்** : (படுக்கையைவிட்டு எழுந்து திருவிவிலியத்தை எடுத்துப் புரட்டுகிறான்)

"உன் பெயரைப் பற்றி அக்கறைகொள்; ஆயிரம் பொற் புதையல்களை விட உனக்கு அது நிலைத்து நிற்கும். நல்வாழ்க்கை சில நாட்களே நீடிக்கும்; நற்பெயர் என்றென்றும் நீடிக்கும். குறித்த காலத்திற்கு முன்பே உங்கள் பணிகளைச் செய்து முடியுங்கள். அவ்வாறாயின் குறித்த காலத்தில் கடவுள் உங்களுக்குப் பரிசு வழங்குவார்."

(படித்து முடித்தவன் நடந்த வண்ணம்)

எத்தனை அர்த்தமுள்ள ஆழமுள்ள வார்த்தைகள், நான்தான் காலத்தை விரையமாக்கி, என் பணிகளைச் செய்ய தவறி விட்டேன். இனியும் அவ்வாறு இருக்கக் கூடாது (தயாராகி வீட்டை விட்டு வெளியே செல்கிறான்).

## காட்சி - 2

(சுசிலன், மகிழன்)

**மகிழன்** : டேய்! எப்படிடா இருக்கா? பார்த்து ரொம்ப நாளாயிட்டே!

**சுசிலன்** : போடா! வாழ்க்கையே வெறுத்துப் போச்சு!

**மகிழான்** : ஏண்டா! இப்படி சளிச்சிக்கிற. . .

**சுசிலன்** : அது இல்லடா! கல்வியை இடைநிறுத்தம் செய்த எவ்வளவு பெரிய தவறு என்பதை இப்பொழுதுதான் உணர்கிறேன்.

**மகிழன்** : இது தானா. . . டேய் மீண்டும் கல்லூரியில் சேர்ந்து படித்தால் போச்சு. இதுக்குப் போய். . .

**சுசிலன்** : ஆமாம்! இது நல்ல யோசனைதான். . .

**மகிழன்** : இது இப்பத்தான் புரியுதாக்கும். இந்த புண்ணாக்குக்கு. . .

**சுசிலன்** : நாம் விரும்பியதை அடையவும், மாண்புடனும் மதிப்புடனும் வாழவும் கல்வி ரொம்ப அவசியமடா.

**மகிழான்** : சரி, சரி! இப்ப எங்க கிளம்பிட்ட

**சுசிலன்** : விடிந்தும் விடியாததுமாய் எங்க வீட்டில வாய்க்கு வந்தபடி கொட்டி தீர்க்கிறங்கடா. . . என்ன செய்வதென்று அறியாம, வீட்டிலிருந்து வெளியே வந்திட்டேன்.

**மகிழான்** : இது பெரிய தவறுடா. நீ வீட்டுக்குப் போய் ரெடியாயிட்டு வா! நாம இருவரும் சட்டக் கல்லூரிக்குப் போயிட்டு வருவோம்.

## காட்சி - 2

(சுசிலன், மகிழன், கல்லூரி முதல்வர்)

(இருக்கையில் இருக்கிறார். இருவரும் உள்ளே நுழைதல்)

**முதல்வர்** : வாங்க பசங்களா! என்னாச்சு மீண்டும் சேரப் போறீங்களா?

**இருவர்** : ஆமாங்க சார்.

**முதல்வர்** : சரி சரி! இப்பவாவது, உணர்ந்தீங்களே. . .

(முறையாக எல்லாம் நிரப்பப்படுகிறது. இருவரும் வகுப்பறைக்குள் செல்லுதல்)

## காட்சி - 4

(சுசிலன், மகிழன்)

**மகிழன்** : டேய் நாளைக்குத் தானே நமது தலையெழுத்தை நிர்ணையிக்கும் நாள்.

**சுசிலன்** : என்னது? தலையெழுத்தை நிர்ணையிக்கும் நாளா?

**மகிழன்** : நாம எழுதப் போற தேர்வு பற்றிதான்

**சுசிலன்** : டேய். நீ என்ன நினைத்தாலும் பரவாயில்லடா. ஒன்னு தெரியுமா இந்த முறை நான் தான் முதலிடத்தைப் பிடிப்பேன்.

**மகிழன்** : (வாய்விட்டு சிரித்தபடி) என்னது? கனவு எதாவது கண்டயாடா?

**சுசிலன்** : ஏண்டா, உனக்கு இவ்வளவு நக்கல், கரையாண்டி?

**மகிழன்** : இல்ல பகல் கனவு ஏதாவது கண்டுட்டேயான்னு. . .

**சுசிலன்** : பொறுத்திருந்து பாருடா! ஐயா Kinguda. . .

**மகிழன்** : கிங்காவது, கொங்காவது. . .

**சுசிலன்** : போடா, போய் உன் வேலையைப் பாரு. . . ஐயா! யாருன்னு நிரூபிக்கிறேன்.

**மகிழன்** : அதையும் பார்த்திருவோமே. . .

(இருவரும் கலைதல்)

## காட்சி - 5

(மகிழன், சுசிலன்)

**சுசிலன்** : (கேக்குடன் வருதல்)
டேய் என்னடா தலையில கைவச்சிட்டு mouth ஆயிட்ட . . .

**மகிழன்** : மௌனமாயிருத்தல்

**சுசிலன்** : கையைத் தட்டிவிட்டபடி டேய் உன்னைத் தாண்டா. . . (மறுபடியும்)

**சுசிலன்** : டேய் உன்னைத் தாண்டா. . .

**மகிழன்** : (கண்ணீர் சிந்திய படி) டேய் என்னை மன்னிச்சிருடா. . . நான் உன்மீது தப்புக் கணக்குப் போட்டுட்டேன். இப்பப்பாரு நீ அதிக மதிப்பெண்கள் எடுத்து முதல் இடத்தைப் பிடித்து விட்டாய். நான் வெற்றி பெற்றும் தகுதியற்ற நிலையில் இருக்கிறேன். படிப்பில் பின்தங்கிய நீ எப்படிடா. . .

**சுசிலன்** : அது ஒண்ணுமில்லடா. . . தினமும் படிப்பதற்கு முன் திரு விவிலியம் வாசித்து விட்டு, தூய ஆவியாரிடம் வேண்டுதல் செய்வேன். ஆண்டவர் மீது அச்சம் கொண்டேன். அதுவே எனக்கு நற்பயிற்சியினையும், பற்றுறுதியையும், பணிவையும் தந்தது. என்னால் எந்த விதமான இடையூர்களும் இல்லாமல் படிக்க முடிந்தது. நன்றாகப் புரிந்துக் கொள்ள வழிகாட்டியது எனது ஆழ்ந்த நம்பிக்கையோடு கூடிய ஜெபமே! அதுவே இந்த அளவற்ற மகிழ்ச்சியினை எனக்குத் தந்துள்ளது.

**மகிழன்** : நீயாடா இப்படி பேசுற. . .

**சுசிலன்** : நான் தாண்டா! ஒவ்வொரு நாளும் என்னைப் பெற்றெடுத்த தாயும் தந்தையும் என் உடன் பிறந்தோர்களும் என்மீது தெளித்த ... மொழிகள் தான் என்னை இந்த அளவுக்கு கடவுள்மீது பற்றுள்ள மகனாக மாற்றியது. ஒன்று உனக்குத் தெரியுமாடா?

**மகிழன்** : என்னது சொல்லுடா?

**சுசிலன்** : படிப்பை நிறுத்திவிட்டு வீட்டில் இருந்த பொழுது நான் பட்ட அவமானத்துக்கு அளவே இல்லை. எத்தனை எத்தனை இழிவான வார்த்தைகள். . . நினைக்கும் போதே எப்படியோ இருக்குதுடா. (கதைப் பொத்தியபடி)

**மகிழன்** : உங்க வீட்டில் உள்ளவர்களா அப்படி திட்டினார்கள்? நம்பவே முடியலடா.

சுசிலன் : அதப் போய் ஏன் கேட்கிற. . . செத்துப் போயிடலாமா? என்று கூட நினைத்தது உண்டுடா. . .

மகிழன் : சரி சரி! கலைப்படாதே. உனக்குத்தான் ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்குதே!

சுசிலன் : ஆமாடா! பொறுமையே என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்தது என்றும் சொல்லலாம். என்னைத் திட்டிய போதெல்லாம் நான் மௌனம் சாதித்தேன். அந்த மௌனமே எனக்கு இப்பொழுது மிகப் பெரிய ஆறுதலைக் கொடுத்துள்ளது. இன்னொன்று உனக்குச் சொல்ல விரும்புகிறேன் மகிழன்.

மகிழன் : என்னதுடா?

சுசிலன் : வேறு ஒன்றுமில்லடா? விவிலியம் என்பது நம்மையும் நமது வாழ்க்கைப் பாதையையும் நேர்வழிப்படுத்தும் மாபெரும் யுக்தி என்றுதான் நான் சொல்வேன். அதில் பொதிந்திருக்கும் வார்த்தைகள் வாழ்வளிக்கும் அமிர்தம் போன்றது. எதை எதையோ தேடி அலையும் நாம் திருவிவிலியத்தை வாசித்து வாழ்வாக்க மறந்து விட்டோம். நான் பெற்ற மெய்யுணர்வினை உனக்குச் சொல்கிறேன். இன்றிலிருந்து நீயும் திரு விவிலியத்தை வாசிக்க மறவாதே! உணர்ந்து, ஆழ்ந்து வாசி. இறைவனில் நாம் ஒன்றிப்போம். வாழ்வில் துயர் நீக்கி ஆறுதல் பெறுவோம் சரிடா! நாளை சந்திப்போம்.

மகிழன் : bye. . .

**நன்றி! வணக்கம்!**

**திருமதி. ஜீ. மரிய ரோஸ்லின்**
*தூத்துக்குடி மறைமாவட்டம்*



# இயேசு வருவாரா?

## (நாடகம்)

### காட்சி - 1

ஞாயிறு மறைக்கல்வி வகுப்பு

**மாணவியர்** : Good Morning Teacher.

**டீச்சர்** : Good Morning Children. இன்றைக்கு ஞாயிறு மறைக்கல்விக்கு நிறைய பேர் வந்திருக்கீங்க. ரொம்ப சந்தோஷம். எல்லோரும் இன்றைக்கு பூசைக்கு போனீங்களா?

**மாணவியர்** : எல்லோரும் பூசைக்கு போனோம் Teacher

**டீச்சர்** : Very Good. இன்றைக்கு நான் எந்தப்பாடமும் நடத்தப் போறதில்ல. உங்களுக்கு ஆண்டவர் கூட பேசச் சொல்லித் தரப்போறேன். அதோ நம்ம பெரிய கோவில் பக்கத்துல ஒரு கட்டடம் இருக்கே. அது என்ன தெரியுமா?

**மாணவியர்** : நற்கருணை ஆலயம் Teacher.

**மாணவியர்** : ஜீஸஸ்தான். நற்கருணை வடிவில் இருக்கிறார்.

**டீச்சர்** : பரவாயில்லையே, Correct-ஆ சொல்ற அங்க யேசு தனியா தன் இதயத்தைத் திறந்து வைத்துக்கொண்டு காத்துக் கொண்டிருக்காரு. அமைதியாய் இருக்கும்போது நம்மோட பேச ஆசைப்படறாரு.

**மாணவி 1** : டீச்சர், நீங்க தெரியாம சொல்றீங்க. நான் எங்க அம்மா கூட அடிக்கடி அங்கே போவேன். நாமதான், அவங்ககிட்ட அது வேணும், இது வேணும் சொல்லணும். ஜீஸஸ் கேட்டுக் கிட்டுதான் இருப்பாரு. ஆனா பேசமாட்டாரு.

**டீச்சர்** : நாம ஜீஸஸ் கிட்ட பேசும்போது அவர் பதில் சொல்வது நமக்கு கேட்கும். நாம நமக்கு வேண்டியதக் கேட்டாமட்டும் போதாது. நமக்கு கிடைத்த நன்மைகளுக்கு நன்றி சொல்லணும். தப்பு செய்தா மன்னிப்பு கேட்கனும். அப்புறம் நம்ம வீட்ல, Schoolல நடக்கிறது எல்லாம் அவர்கிட்ட சொல்லலாம். நிச்சயம் யேசு உங்களோட பேசுவார்.

**மாணவி 2** : என்ன பேசுவார் Teacher?

**டீச்சர்** : இயேசு நம்ம நண்பர் தானே. அதனால் "நீ அஞ்சாதே. உன்னோட நான் இருக்கேன்" என்று சொல்வாரு. நீ கேட்கறத எல்லாம் தருவாரு. அப்புறம் நீ எப்படி வாழனும்னு சொல்லித் தருவாரு. இனி நீங்க அவரோட பேசிட்டு அடுத்தவாரம்

என்கிட்ட யேசு என்ன பேசுனாருன்னு சொல்லுங்க. தினமும் கொஞ்ச நேரமாவது அவர்கிட்ட மனம் திறந்து பேசுங்க. பேசுவிங்களா?

**மாணவியர் :** சரி Teacher. நாங்க ஜீஸஸ்கிட்ட பேசிட்டு அவர் என்ன சொன்னாருன்னு உங்ககிட்ட சொல்றோம், Teacher நாங்க வர்றோம்.

## காட்சி - 2

**இடம்:** ஆலயம், பாத்திரங்கள்: மாணவி ரோசி, இயேசுவின் குரல்

**ரோஸி :** ஜீஸஸ், நான் ரோஸி வந்திருக்கிறேன். நீங்க என் கூட பேசுவீங்கன்னு எங்க Teacher சொன்னாங்க. பேசுங்க ஜீஸஸ்.

**இயேசு.குரல்:** ரோஸி, நீ என்ன நேசிக்கிறாயா?

**ரோஸி :** ஐய்யா, ஜீஸஸ் பேசறாரு. ஜீஸஸ், உங்கள ரொம்ப, ரொம்ப நேசிக்கிறேன்.

**குரல் :** உனக்கு என்ன வேணும் மகளே.

**ரோஸி :** ஜீஸஸ் எப்ப கூப்பிட்டாலும் கண்டிப்பா வரனும்.

**குரல் :** கண்டிப்பா வரேம்மா

**ரோஸி :** அப்புறம் ஜீஸஸ், எங்க அம்மா, அப்பா அடிக்கடி சண்ட போடுறாங்க.

**ஜீஸஸ் :** சரி, சண்டை போடாம இருக்கச் சொல்றேன்.

**ரோஸி :** அப்புறம், அடுத்த மாசம் எங்க அக்காவுக்கு கல்யாணம். நீங்க வரனும்.

**ஜீஸஸ் :** நான் உன் கூடவே இருந்து, எல்லா உதவியும் செய்யுறேம்மா, உனக்குன்னு ஒன்னும் கேக்கலியே.

**ரோஸி :** அதன் நீங்க என் கூடவே இருப்பீங்கள்ள. அப்பப்ப நீங்க நான் கேக்கறத தருவீங்கள்ல. நீங்க என்னை விட்டு பிரியாம இருக்கனும். அதான் எனக்கு வேணும்.

**ஜீஸஸ் :** உன்னை விட்டு பிரியவே மாட்டேம்மா

**ரோஸி :** சரி ஜீஸஸ். நாள் முழுவதும் உங்ககிட்ட பேச ஆசதான். Home Work செய்யனும். அம்மாவுக்கு வேலை செய்ய Help பண்ணனும். நான் போயிட்டு நாளைக்கு வர்ரேன். நீங்க தனியா இருக்க பயப்படாதீங்க. என் Friends எல்லாம் வந்து பேசுவாங்க. போயிட்டு வர்ரேன்.

**ஜீஸஸ் :** போய்வா மகளே, உனக்காக நான் ஆவலோடு காத்திருப்பேன்.

## காட்சி - 3

**இடம்:** ஞாயிறு மறைக்கல்வி வகுப்பு

**டீச்சர் :** வாங்க பிள்ளைகளே, ஜீஸஸ் கிட்ட நீங்க பேசனீங்களா, ஜீஸஸ் உங்களோடு பேசினாரா?

**மாணவி 1** : போங்க டீச்சர், நான் தான் பேசினேன். ஜீஸஸ் வாயே திறக்கல.

**மாணவி 2** : கேள்வி கேட்டா கூட பதில் சொல்ல மாட்டேங்கிறாரு.

**மாணவி 3** : அதான் நான் போன வாரமே சொன்னேன்ல. ஜீஸஸ் பேச மாட்டார். கேட்கத்தான் செய்வாருன்னு.

**மாணவி 4** : எங்க அம்மா, அப்பா, அண்ணன், அக்கா எல்லாம் ஜீஸஸ் பேசுவாருன்னு சொன்னா கிண்டல் பண்றாங்க.

**ரோஸி** : டீச்சர், ஜீஸஸ் என் கிட்ட நல்லா பேசினாரு டீச்சர், ஏன் இவங்க கூட பேசல. இவங்க மேல என்ன கோபம் தெரியலையே.

**டீச்சர்** : இயேசுவுக்கு யார் மேலும் கோபம் கிடையாது. பிள்ளைகளே! ஜீஸஸ் உங்களோடும் மனசுக்குள்ளே பேசியிருப்பார். ஆனால் நீங்க இனிம அமைதியா இருந்து இயேசு என்ன பேசறார்னு ஆழ்ந்து கவனிங்க. இயேசு பேசுறது உங்களுக்கு கேட்கும்.

**மாணவியர்** : முயற்சிக்கிறோம் Teacher.

**டீச்சர்** : இன்றைக்கு நாம பக்கத்து ஊருக்கு Picnic போறோம். அங்க உள்ள மறைக்கல்வி வகுப்பு குழந்தைகள் நமக்கு கலை நிகழ்ச்சிகள் தர்றாங்க. பார்த்துட்டு அடுத்த Busல புறப்பட்டு சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வந்துரலாம். உங்க வீடுகளுக்கு Phone பண்ணி விபரத்த சொல்லிடுவோம். வாங்க கிளம்புவோம்.

## காட்சி - 4

(கலை நிகழ்ச்சி முடிந்து Bus-க்கு காத்திருக்கிறார்கள்)

**டீச்சர்** : ஐயா, Busஐ இன்னும் காணலயே

**வழிப்போக்கர்:** நீங்க பக்கத்து ஊரா, நானும், உங்க ஊருக்குத்தான் வரனும். மேற்கே போன Bus திரும்பி வர 2 மணி நேரம் ஆகுமாம். ஏதோ Breakdown ஆயிட்டாம்.

**மாணவியர்** : டீச்சர் பசிக்குது டீச்சர்

**மாணவியர்** : ஐயா, இங்க ஓட்டல் ஏதாவது இருக்குமா?

**வ.போக்கர்** : நல்லா கேட்டீங்கம்மா. இங்க ஓட்டல் ஒன்னும் கிடையாது. ஓட்டலுக்கு போகனும்னா உங்க ஊருக்குத்தான் வருவோம்.

**மாணவி 1** : நம்ம ரோஸிகிட்ட சொன்னா, ஜீஸஸ் கிட்ட பேசி நமக்கு சாப்பாடு வாங்கித் தருவா டீச்சர்.

**மாணவி 2** : ரோஸி, பசி வயிற்றக் கிள்ளுது. சீக்கிரம் ஜீஸஸ் கிட்ட பேசு.

**ரோஸி** : (முழங்காலிலிருந்து) ஜீஸஸ், நாங்க எல்லோரும் ரொம்பப் பசியாயிருக்கோம். எங்களுக்கு சாப்பாடு தருவீங்களா ஜீஸஸ்?

சொல்லுங்க ஜீஸஸ், பேசுங்க ஜீஸஸ். ஏன் இன்னைக்கு பேச மாட்டீக்கிறீங்க. உங்க அம்மா மாதா கிட்ட சாப்பாடு கொடுத்து விடுங்க ஜீஸஸ். ஏன் ஜீஸஸ் வரமாட்டீங்க. வாங்க ஜீஸஸ் வாங்க ஜீஸஸ் அழுகிறாள் (பாடல் - என்னோட இயேசுவே, கொஞ்ச நேரம் பேசுமே. . .)

| | | |
|---|---|---|
| **மாணவியர்** | : | பார்த்தீங்களா டீச்சர், ஜீஸஸ் பேசலன்னு சொன்னா நீங்க நம்பலையே. ரோஸி நம்ம கிட்ட 'கப்சா' உட்டிருக்கா. |
| **டீச்சர்** | : | அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. வாங்க ஏதாவது Tea கடை இருக்குதான்னு பார்ப்போம். |
| **பெண்** | : | எங்கம்மா, எல்லோரும் போறீங்க? |
| **டீச்சர்** | : | அம்மா, நான் பக்கத்து ஊரு Teacher. மாணவியரை Picnic கூட்டிட்டு வந்தேன். Bus வர நேரமாகுமாம். பிள்ளைகள் பசியோட இருக்கிறாங்க. இங்க Tea கடையாவது இருக்குமா? |
| **பெண்** | : | இங்க ஒரு கடையும் கிடையாது Teacher. Teacher, என் மகள் காலைல பூசைல புது நன்மை வாங்கினா. Bus Break Down ஆனதால மேற்க இருந்து வரக்கூடிய சொந்தக்காரங்க எல்லாம் வரமுடியாம சாப்பாடு நிறைய இருக்குது. இந்த ஏழை வீட்டு சாப்பாட்ட சாப்பிடுவீங்களா Teacher. |
| **டீச்சர்** | : | சாப்பிடறோம்மா, இந்த சாப்பாட்ட நீங்க தரல. அந்த இயேசுவின் திரு இருதயம்தான் தந்திருக்கிறார். பிள்ளைகள் வாருங்கள். (திரும்பிப் பார்க்கிறார்) (பிள்ளைகள் முழங்காலிலிருந்து கடவுளுக்கு நன்றி கூறுகிறார்கள்) |
| **மாணவியர்** | : | ஜீஸஸ் எங்கள மன்னிச்சிருங்க. எங்களத்தேடி வந்துட்டீங்க ஜீஸஸ் வந்துட்டீங்க ஜீஸஸ். |

**திருமதி. ஜோ. ரெஜினா கிரகோரி**
*தூத்துக்குடி மறைமாவட்டம்*



# பகிர்வின் உறவு

## காட்சி - 1

இடம்: ரோஸி வீடு பாத்திரங்கள்: ரோசி, பக்கத்து வீட்டு ஜீவா

**ஜீவா** : அக்கா, அக்கா கொஞ்சம் காபி பவுடர் கிடைக்குமா?

**ரோசி** : உனக்கில்லாததா, இந்தா காப டப்பா, உனக்குத் தேவையானத எடுத்துக்க.

**ஜீவா** : அக்கா, விஷயம் தெரியுமா. எதிர்வீட்டு விஜயாவோட கணவருக்கு வேல போய்ட்டாம். கடன் கிடன் கேட்டு தொந்தரவு பண்ணுவா. கொஞ்சம் ஜாக்கிரதையா இருத்துக்குங்க நான் வர்ரேன். என் வீட்டுக்காரர் office-ல இருந்து வந்து ரொம்ப நேரமா காபி கேட்கிறார். சீனி இருக்குதான்னு தெரியல பக்கத்து கடைக்குத்தான் போகனும்.

**ரோசி** : சீனி தானே, அக்கா தரமாட்டேனா, இந்தா, எடுத்துட்டுப் போ. கடைக்குப் போய் நேரத்தை வீணாக்காத சொல்லு. ஏன் அவ புருஷனுக்கு வேல போயிடுச்சாம்?

**ஜீவா** : அதல்லாம் தெரியாதுக்கா. உடம்பு சுகமில்லாமல் இருக்கிறார் போல வேலைல இருந்து அனுப்பிட்டாங்க. அவகிட்டா ரொம்ப பேச்சு வச்சிக்கிராதீங்க. அப்புறம் அதை, இதக் கேட்டு வதைப்பா. நான் வர்ரேன்.

**ரோசி** : நல்ல வேளை முதல்லயே சொல்லிட்டா, இல்லன்னா நாம் ஏமாந்து வீட்ல உள்ளதெல்லாம் கொடுத்துட்டு ஆண்டியா-யிருவேன். இனி கவனமா இருந்துக்கிறேன். இந்தா இப்பவே ரொம்ப நேரமாயிட்டு. இனி பால் வாங்கிட்டுப் போறதுக்குள்ள ரொம்ப நேரமாகிடும். இந்த பாலையும் கொண்டு போய் சீக்கிரம் காபி போட்டு உன் கணவருக்குக் கொடு.

**ஜீவா** : உங்க பாசத்துக்கு அளவே இல்லக்கா. நான் வர்ரேன். நீங்க கவனமா இருங்க. அப்புறம் இன்னைக்கு நம்ம கோவில்ல புனித பட்டம் வாங்கிய அன்னை தெரசாவைப் பத்தி நாடகம் போடறாங்க. ரெடியாயிருங்க. நான் சீக்கிரம் வந்திரேன்.

(ஜீவா வெளியேறுகிறாள்; விஜயா உள்ளே நுழைகிறாள்)

**விஜயா** : அக்கா, ரோசி அக்கா

**ரோசி** : வா ரோசி, ரொம்ப களைப்பாயிருக்கியே.

**விஜயா** : ஆமாக்கா அவருக்கு உடம்புக்கு முடியல. அதனால ஒரு மாசமா வேலைக்குப் போகல. கையில பணமில்ல. அதுதான் நான் வேலைக்குப் போகலாம்னு நாலைந்து கம்பெனிகளுக்குப் போய் விண்ணப்பம் கொடுத்துட்டு வந்திருக்கேன்.

| | | |
|---|---|---|
| **ரோசி** | : | அடப்பாவமே, மாசக் கடைசியில வந்திருக்க. உனக்கு உதவி செய்யக்கூட முடியலையே. |
| **விஜயா** | : | பரவாயில்லக்கா. . . நான் . . . சமாளிச்சிக்கிருவேன். என் வீட்டுக் காரர் மருத்துவமனைக்கு போயிருக்கிறார். நான் கொஞ்சம் வெளியே போகனும் இந்த சாவியை அவர் கிட்ட கொடுத்துருவீங்களாக்க |
| **ரோசி** | : | வந்து, நான் அன்னை தெரசா நாடகம் பார்க்க கிளம்பிக் கொண்டிருக்கேனே. |
| **விஜயா** | : | சரி, நான் பக்கத்து வீட்ல குடுத்துக்கிறேன். வர்ரேன்கா. |

## காட்சி - 2

அன்னை தெரசா வாழ்க்கையில் ஒரு நிகழ்ச்சி

இடம்: குடிசை வீடு அன்னை தெரசா; பாத்திரங்கள்: அன்னை தெரசா ஒரு பெண்ணும் அவளின் 7 குழந்தைகள்

| | | |
|---|---|---|
| **அ. தெரசா** | : | அம்மா, அம்மா |
| **பெண்** | : | வணக்கம்மா, வாங்கம்மா, இந்தக் குடிசையைத் தேடி வந்திருக்கீங்களே, நீங்க யாரம்மா? |
| **அ. தெரசா** | : | அம்மா நீங்க ரொம்ப ஏழ்மை நிலைல இருக்கீங்க. உங்கள் குழந்தைகளுக்கு சமைத்துக்கொடுக்க அரிசி கூட இல்லாமல் இருக்கிறீர்கள் எனக் கேள்விப்பட்டேன். |
| **பெண்** | : | ஆம் அன்னையே, இதோ நானும் எனது ஏழு பிள்ளைகளும் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறோம். பசியின் கொடுமையைத் தாங்க முடியவில்ல. வேலை செய்யக் கூட சக்தியில்லை. |
| **அ. தெரசா** | : | கவலைப்படாதீர்கள். இந்தாங்கம்மா இதுல அரிசி, பருப்பு, காய்கறி எல்லாம் இருக்கிறது. உங்கள் குழந்தைகளுக்கு சமைத்துக் கொடுங்கள். அங்கே பாருங்கள். அவர்கள் பசியோடு துவண்டு கிடக்கிறார்கள். |
| **பெண்** | : | இந்த ஏழை மேல் இரக்கம் வைத்திருக்கும் நீங்கள் யாரும்மா. |
| **அ. தெரசா** | : | (சிரித்துக் கொண்டே) அழகான ஆண்டவரை உங்களைப் போல் ஏழைகளிடம் கண்டு, அவர்களுக்கு உதவி புரியும் பணியாளர் தானம்மா நான். |
| **பெண்** | : | அன்னையே, அந்த ஆண்டவனையே உங்களிடம் பார்க்கிறேன் அம்மா. |
| | | (அந்தப் பெண் பொருள்களை இரண்டாகப் பிரிக்கிறாள்) |
| **அ. தெரசா** | : | என்னம்மா இது, பசியோடு இருக்கின்றீர்கள். சமைத்துச் சாப்பிடாமல் ஏன் பிரிக்கின்றீர்கள். |
| **பெண்** | : | அன்னையே, அடுத்தத் தெருவில் ஒரு குடும்பம் எங்களை விட அதிகப் பசியில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் தந்ததில் பாதி எங்களுக்குப் போதும் அம்மா நான் ஓடிப் போய் மீதி பாதியை அந்தக் குடும்பத்திற்கு கொண்டு போய் கொடுத்து |

விட்டு வருகிறேன். அவர்களும் உங்கள் கருணையால் வயிறு நிரம்ப உண்பார்கள்.

**அ. தெரசா** : அம்மா, ஏழைக்கு உதவி செய்வதில் நீ அனைவரையும் மிஞ்சி விட்டாய்.

**பெண்** : பசியின் வலியும், கொடுமையும் அனுபவித்தவருக்குத் தாம்மா அடுத்தவரின் பசி புரியும்.

**அ. தெரசா** : அதற்காக பட்டினியாய் கிடந்த உனக்குக் கிடைத்த உணவை இன்னொரு ஏழைக்கு பகிர்ந்தளிக்கத் துடிக்கும் உனது பரிவு என்னை நெகிழ வைக்குதம்மா. மண்ணகத்தில் நீ செய்யும் உதவிக்கு விண்ணகத்திலிருந்து ஆசீர் நிறைவாகக் கிடைக்கும். நான் வருகிறேன்.

## காட்சி - 3

**ஜீவா** : அக்கா!

**ரோசி** : இன்னைக்கு என்ன கேட்க வந்திருக்க ஜீவா.

**ஜீவா** : போங்கக்கா. நான் எதுவும் கேட்க வரல. விஜயாவைப் பத்தி சொல்லிட்டுப் போலாம்னு வந்தேன். இட்லி, சாம்பார் செய்துட்டேன். என் பொண்ணு இட்லிப் பொடி கேட்டு அடம் பிடிக்கிறா.

**ரோசி** : இட்லி பொடி தார்ரேன். விஷயத்தை சொல்லு.

**ஜீவா** : அக்கா, விஜயாவை இன்னைக்கு வட்டிக் கடையில பார்த்தேன். நகையை ஈடுவச்சு பணம் வாங்குறதுபோல் இருந்தது. சாப்பிடக்கூட பணம் இல்லாம இருந்திருக்கா.

**ரோசி** : ஐயோ பாவம் ஜீவா. விஜயா நேற்று ஏதோ உதவி கேட்கத் தான் வந்திருப்பா. நான் தான் நாசூக்கா என்னிடம் எதுவும் இல்லைன்னு சொல்லி அனுப்பிட்டேன். எதுவும் கேட்காமலே போய்ட்டா. நேற்று அன்னை தெரசா நாடகம் பார்த்துட்டு வந்த பிறகு மனசுக்குள்ள என்னவோ பண்ணுகிறது. அன்னை தெரசா ஏழைகளை இறைவனின் சாயல்ல பார்க்கிறாங்க. அந்த ஏழையோ இன்னொரு ஏழையை இறைவனாகப் பார்க்கிற. ஆனா நம்ம விஜயாவின் கஷ்டத்துல உதவாம இருக்கோம்.

**ஜீவா** : ஆமாக்கா, நீ சொன்ன பிறகு தான் எனக்குப் புரியுது விஜயா சாப்பாட்டுக்கும், அவன் கணவர் வைத்தியம் செலவுக்கும் எவ்வாறு கஷ்டப்படுவா.

**ரோசி** : நாம கண்டிப்பா உதவி செய்யனும்.

**ஜீவா** : நானும் உதவி செய்யறேன்கா.

## காட்சி - 4

இடம்: ரோசி வீடு, பாத்திரங்கள்: ரோசி, ஜீவா, விஜயா

**ஜீவா** : அக்கா, இந்தாங்க விஜயாவுக்கு கொடுக்க பணம் கொண்டு வந்திருக்கேன்.

**ரோசி** : நானும் எங்க வயல்ல விளைஞ்ச அரிசி வைச்சிருக்க.

(அதோ விஜயாவே வர்ராள்)

**ஜீவா** : இந்தா விஜயா, இதுல கொஞ்சம் பணம் இருக்கு உன் கணவர் வைத்தியச் செலவுக்கு எடுத்துக்க.

**ரோசி** : நானும் எங்க வயல்ல விளைஞ்ச அரிசியை உனக்குத் தர எடுத்து வச்சிருக்கேன்.

**விஜயா** : அக்கா, ஜீவா நீங்க இரண்டு பேரும் என் மேல காட்டுற பாசத்துக்கு என்ன கைம்மாறு செய்யப் போறேன்னு தெரியல. கடவுள் இரக்கத்தாலே நாங்க எந்தக் கஷ்டமும் இல்லாம இருக்கோம். நாளைக்கு எங்க வீட்டின் முன்புறம் கடை தொடங்கப் போகிறோம். நீங்க வந்து எங்களை ஆசீர்வதிக்கனும்.

(தட்டில் கொண்டு வந்த தேங்காய், பழம், சேலைகளை அவர்களுக்கு கொடுக்கிறாள்)

(ஜீவா, ரோசி ஒருவரையொருவர் பார்த்து விழிக்கிறாள்)

**ரோசி** : பணம் எப்படி?

**விஜயா** : அவசரத்துக்கு உதவாத நகை எதுக்கு? எல்லா நகையையும் அடகு வச்சு பணம் வாங்கினேன். கடை வச்சிட்டோம். அரிசி, பருப்பு, காய்கறிகள் எல்லாம் நம்ம கடைல இருக்குது. இனி மாசக் கடைசில நீங்க கஷ்டப்பட வேண்டாம். நம்ம கடையில சாமான்கள் வாங்கிக் கொள்ளலாம். பணத்தைப் பற்றி கவலைப்பட வேண்டாம்.

**ரோசி** : விஜயா, நீ இன்னொரு அன்னை தெரசாவாக வருவாய்.

**நன்றி**

**திருமதி. ஜோ. ரெஜினா கிரகோரி**

*தூத்துக்குடி மறைமாவட்டம்*

